بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/01/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**கலப்பற்ற தன்மை மற்றும் நன்றி உணர்வின் மொத்த உருவமாகத் திகழ்ந்த சில பத்ர் சஹாபிகளின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்பும் மஹ்தியாபாத், புர்கினாஃபாஸோவில் 9 அஹ்மதிகள் ஷஹீத் ஆக்கப்பட்ட வருத்தத்திற்குரிய விஷயத்தை முன்னிறுத்தி ஷஹீத்களின் உயர் அந்தஸ்த்து மற்றும் புர்கினோஃபாஸோவின் நிலைமைக்காக துஆ செய்வதற்காக ஜமாஅத் மக்களுக்கு வலியுறுத்தலும்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

நான் கடந்த குத்பாக்களில் சில சஹாபிகளின் குறிப்பின் சில பகுதி மீதமுள்ளது அதனை எடுத்துரைப்பேன் என்று கூறியிருந்தேன். இன்று அதன் அடிப்படையில், **ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களைப் பற்றி முதலில் எடுத்துரைப்பேன்.** அன்னார் பனூ அஸதைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் நடுத்தர உயரம் கொண்டவராகவும், அன்னாரது தலை முடி மிகவும் அடர்த்தியாகவும் இருந்தது.

ஒரு முகாமின் போது அன்னாரை அமீராக நியமித்து ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம், 'நான் உங்களுக்கு எப்படிப்பட்ட நபரை அமீராக நியமிக்கின்றேன் என்றால், அவர் உங்களை விடச் சிறந்தவர் அல்ல. ஆனால் பசி மற்றும் தாகத்தைத் தாங்கிக் கொள்வதில் உங்களைவிட அதிக வலிமை பெற்றவர் ஆவார்' என்று கூறினார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இஸ்லாத்தில் முதன் முதலில் கொடியின் ஆரம்பம் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களே செய்தார்கள். மேலும், முதன் முதலில் போர்ச் செல்வங்களையும் அன்னாரே விநியோகித்தார்கள்.

**ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் அவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷின் தலைமையில் செல்லவிருந்த ஒரு குழுவைப் பற்றி குறிப்பிடுகிறார்கள்:** இந்த முகாமில் முஸ்லிம்கள் புனித மாதத்தில் கட்டாயத்தின் காரணத்தினால் சண்டையிட்டார்கள். இவ்விஷயம் ரஸூல் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்ததும் அன்னார் மிகவும் கோபமுற்றார்கள். மேலும், 'நான் உங்களுக்கு புனித மாதத்தில் சண்டையிட அனுமதி வழங்கவில்லை' என்று கூறினார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் மிகவும் வெட்கி தலை குனிந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் வாள் உஹுது நாளன்று உடைந்து விட்டது. ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அவர்களுக்குப் பேரித்த மரத்தின் ஒரு கிளையைக் கொடுத்தார்கள். அது அன்னாரது கையில் வாளைப் போன்று ஆகிவிட்டது. அந்நாளில் இருந்து அன்னார் உர்ஜூன் என்ற பெயரால் பிரசித்தி பெற்றார்கள். அபூ நயீம் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் தம் ரப்பின் மீது ஆணையிடுபவராகவும், இறை நேசத்திற்கு உள்ளத்தில் இடம் தருபவராகவும், முதன் முதலில் இஸ்லாமிய கொடியை நிலைநாட்டியவராகவும் இருந்தார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் இமாம் ஷுஅபா அவர்கள் பனூ அஸதின் ஆறு சிறப்புகளை எண்ணினார்கள். அதில் மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் இவ்விஷயத்தைப் பற்றி கூறினார்கள்: இஸ்லாத்தில் முதல் கொடி பனூ அஸதைச் சார்ந்த அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷுக்கு வழங்கப்பட்டது. மேலும் பனு அஸதின் நான்காவது சிறப்பு யாதெனில், இஸ்லாத்தில் முதல் போர்ச் செல்வத்தையும் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களே விநியோகம் செய்தார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் உஹுது நாளன்று ஷஹீதானார்கள். அச்சமயம் ஸைனப் பின்த் ஹுஸைமா அன்னாருடன் திருமண பந்தத்தில் இருந்தார்கள். அவர்களது ஷஹாதத்துக்கு பிறகு ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனபை மணந்து கொண்டார்கள்.

**அடுத்த குறிப்பு ஹஸ்ரத் ஸாலிஹ் ஷுக்ரான் (ரலி) அவர்களுடையதாகும்.** சிலரைப் பொருத்தவரை ஷுக்ரான் மற்றும் உம்மே அய்மன் ஆகியோர் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்குத் தம் தந்தையின் தரப்பிலிருந்து சொத்துகளாக கிடைத்தனர். பத்ரு போருக்குப் பிறகு அன்னார் அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு அன்னாரைக் குளிப்பாட்டும் நற்பாக்கியம் பெற்றவர்களுள் ஹஸ்ரத் ஸாலிஹ் ஷுக்ரான் (ரலி) அவர்களும் ஒருவராவார்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் ஷுக்ரனுடைய மகனை ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களிடம் அனுப்பினார்கள். மேலும், 'நான் உங்களிடம் ஒரு தூய மனிதரை அனுப்புகிறேன். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் அவர் தந்தையின் அந்தஸ்து எவ்வாறு இருந்ததோ அதனடிப்படையில் அவருடன் நடந்து கொள்ளுங்கள்' என்று எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் வஃபாத் ஆனார்கள். ஹஸ்ரத் ஸாலிஹ் ஷுக்ரான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை ஒரு கழுதையில் பயணித்தவர்களாக தொழுது கொண்டிருந்ததைக் கண்டேன்.

இதுவும் ஒரு மார்க்க விவகாரமாகும். சவாரி செய்து கொண்டிருக்கும்போது தொழுகை தொழ முடியுமா, இல்லையா என்பது பற்றியது.

**அடுத்த குறிப்பு ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷுமுடையதாகும்.** அன்னாரது பெயர் மாலிக் பின் துஹைஷும் அல்லது இப்னு துஹ்ஷும் என்றும் கூறப்படுகின்றது. ஸுஹைல் பின் அம்ரைக் கைது செய்யும் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மாலிக் அவர்கள் கூறிய கவிதையில் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: நான் ஸுஹைலைக் கைதி ஆக்கினேன். அதற்குப் பதிலாக சமுதாயத்தின் வேறு எந்த நபரையும் கைதியாக்க விரும்பவில்லை.

உஹது போரின் தினத்தன்று மாலிக் பின் துஹ்ஷும் ஹஸ்ரத் ஹாரிஜா அவர்களைக் கடந்து சென்றார்கள். அவர்களுக்கு 13 காயங்கள் ஏற்பட்டிருந்தன.

மாலிக் ஹஸ்ரத் ஹாரிஜா அவர்களிடத்தில், ரஸூல் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று தங்களுக்கு தெரியுமா எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஹாரிஜா, 'ஒருவேளை அவ்வாறு இருந்தாலும் அல்லாஹ் எந்நிலையிலும் உயிர் உள்ளவன் ஆவான். அவன் மரணிப்பதில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டார்கள். எனவே நீங்களும் உங்களது மார்க்கத்திற்காக சண்டையிடுங்கள்' என்று கூறினார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அதற்குப் பிறகு ஹஸ்ரத் மாலிக், ஸஅது பின் ரபீயைக் கடந்து சென்றார்கள். அவர்களுக்கு 12 கடுமையான காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஹஸ்ரத் மாலிக், அவர்களிடத்தில் இதே விஷயத்தைக் கூறியதும் ஸஅது பின் ரபீ அவர்கள் 'முஹம்மது (ஸல்) அவர்கள் தம் ரப்பின் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். எனவே இஸ்லாத்திற்காக சண்டையிடுங்கள்' என்று கூறினார்கள்.

மக்களுள் சிலர் ஹஸ்ரத் மாலிக் அவர்களைப் பற்றி மாலிக் நயவஞ்சகர்களின் அடைக்கலம் ஆவார்கள் என்று கூறினார்கள். ரஸூல் (ஸல்) அவர்கள், அவர் தொழுவதில்லையா என்று கேட்டார்கள். மக்கள், 'அவர் தொழுகின்றார். ஆனால் அது எப்படிப்பட்ட தொழுகை என்றால், அதில் எந்த ஒரு விஷயமும் இருப்பதில்லை' என்று கூறினார்கள். எனவே ரஸூல் (ஸல்) அவர்கள் 'நான் தொழுபவர்களைக் கொலை செய்வதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளேன்' என்று இருமுறை கூறினார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷும் அவர்களுடன் ஆஸிம் பின் அதீயை மஸ்ஜிது ஸிராரை இடிப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். அன்னாரைப் பற்றி, அன்னாரது சந்ததி மேற்கொண்டு தொடரவில்லை என்று குறிப்பு கிடைக்கின்றது.

**பிறகு, ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்களின் குறிப்பாகும்.** ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் பன்னிரண்டு ஹிஜ்ரியில் அன்னாரது ஷஹாதத் நிகழ்ந்தது. இமாம் ஷாஃபி கூறுகிறார்கள்: ஒரு மனிதர் சொர்க்கவாசியாவார். ஆயினும் பிறகும் பூமியில் பணிவுடன் நடந்து வந்தார். அவர் உக்காஷா ஆவார்.

பத்ர் போர் நிகழ்ந்த பிறகு உடனேயே ஹிஜ்ரி இரண்டில் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை ஒருபோருக்காக புறப்படச் செய்தார்கள். அந்தக் கூட்டத்தில் உக்காஷாவும் அப்துல்லாஹ்வுடன் இருந்தார்கள். உஹது போரின் சந்தர்ப்பத்தில் ரஸூல் (ஸல்) அவர்கள் தொடர்ந்து அம்பெய்து கொண்டிருந்தார்கள். அதன் காரணத்தினால் வில்லின் ஒரு பகுதி உடைந்து விட்டது. ஹஸ்ரத் உக்காஷா வில்லை கட்டுவதற்காக அன்னாரிடமிருந்து கயிறை வாங்கினார்கள். அந்தக் கயிறு சிறியதாகி விட்டிருந்தது. கயிறு சிறியதாகி விட்டது என்று கூறியதும், ரஸூல் (ஸல்) அவர்கள், 'அதனை இழுங்கள்' என்று கூறினார்கள். கூறுகிறார்கள்: நான் கயிறை இழுத்தேன். இறைவன் மீது ஆணையாக! அது எந்த அளவுக்கு நீண்ட கயிறாக ஆகிவிட்டது என்றால், நான் வில்லின் மேற்பகுதியில் அதன் இரண்டு மூன்று சுற்றும் இட்டேன்.

ஒரு போரின் போது ரஸூல் (ஸல்) அவர்கள் மதீனாவில் அபாய அறிவிப்பை செய்தார்கள். எனவே குதிரை வீரர்கள் அன்னாருக்கருகில் ஒன்று கூட ஆரம்பித்தார்கள். அந்த வீரர்களுள் ஹஸ்ரத் உக்காஷாவும் அடங்குவார்கள்.

**அடுத்த குறிப்பு ஹஸ்ரத் ஹாரிஜா பின் ஸைத் (ரலி) அவர்களுடையதாகும்.** அவர்களது சுட்டுப்பெயர் அபூ ஸைத் ஆகும். மற்ற சில சஹாபிகளுடன் அவர்கள் யூதர்களிடத்தில் தவ்ராத்தில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களைப் பற்றி கேள்வி கேட்டதனால் யூதர்கள் பதிலளிக்க மறுத்துவிட்டார்கள். அதைக் குறித்து திருக்குர்ஆனின் வஹீயும் இறங்கியது.

**அடுத்த குறிப்பு ஸியாது பின் லபீத் (ரலி) அவர்களுடையதாகும்.** அன்னாரது சுட்டுப் பெயர் அபூ அப்தில்லாஹ் ஆகும். அன்னாரது சந்ததியினர் மதீனா மற்றும் பக்தாதில் வசித்து வந்தார்கள். ஹஸ்ரத் ஸியாதை ரஸூல் (ஸல்) அவர்கள் ஒரு சமுதாயத்தை நோக்கி அவர்களுக்கு மார்க்கத்தை கற்பிப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். அன்னார் ஹிஜ்ரி 41-ல் ஹஸ்ரத் முஆவியா அவர்களது ஆட்சியின் காலத்தில் மரணித்தார்கள்.

**பிறகு, ஹஸ்ரத் காலித் பின் புகைர் (ரலி) அவர்களின் குறிப்பு உள்ளது.** இவர்கள் பனூ ஸஅத் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள். இவர்களையும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கல்வி புகட்டுவதற்காகவும், திருக்குர்ஆனைக் கற்பிப்பதற்காகவும் ஒரு சமுதாயத்தை நோக்கி மற்ற ஐந்து சஹாபிகளுடன் அனுப்பி வைத்தார்கள். மார்க்கத்தைக் கற்பதற்காக அழைத்துச் சென்றவர்கள் இவர்களைப் பிறகு ஏமாற்றி ஷஹீதாக்கினார்கள்.

**பிறகு, ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களது குறிப்பு உள்ளது.** ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அம்மார் என்ற ஒரு அடிமையைக் கடந்து சென்றார்கள். மேலும், நலம் விசாரித்தார்கள். அதற்கு அம்மார், 'எதிரிகள் என்னை அடித்துக் கொண்டே இருந்தார்கள். தங்களுக்கு எதிராகப் பேசாத வரை என்னை விடவில்லை' என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், 'உங்கள் உள்ளத்தில் எவ்வாறு உணர்ந்தீர்கள்' என்று கேட்டார்கள். அதற்கு அம்மார், 'உள்ளத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது' என்று கூறினார்கள். எனவே ரஸூல் (ஸல்) அவர்கள், 'உள்ளம் ஈமானால் நிறைவு பெற்றிருந்தது என்றால், இறைவன் உம்முடைய பலவீனத்தை மன்னித்து விடுவான்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நடந்த குழப்பங்கள் அதிகரித்ததும் சஹாபிகளுக்கும் கடிதங்கள் வரத் தொடங்கின. எனவே சஹாபிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கவர்னர்களைப் பற்றிய இந்த விஷயங்களைப் பற்றி விழிப்புணர்வூட்டினார்கள். ஆலோசனை செய்த பிறகு சில சஹாபிகள் ஆராய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார்கள். மற்ற அனைவரும் உறுதியான அறிக்கையை அனுப்பி வைத்தார்கள். ஆனால், அம்மார் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை. அதில் எந்த அளவுக்கு தாமதம் ஏற்பட்டது என்றால், அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று எண்ணப்பட்டது.

ஆனால் விஷயம் யாதெனில், அவர்கள் தமது எளிமை மற்றும் அரசியலைப் பற்றி அறியாதிருந்த காரணத்தினால் குழப்பவாதிகளின் சூழ்ச்சிக்கு இரையானார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அம்மார் பின் பின் யாஸிர் இந்தக் குழப்பவாதிகளின் ஏமாற்றத்திற்கு இரையானதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. மேலும் அந்தக் காரணம் யாதெனில், அன்னார் எகிப்தை அடைந்ததும் இந்த குழப்பவாதிகள் அவர்களைத் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டார்கள். மேலும், தங்களது பேச்சுத் திறமையால் எகிப்தின் கவர்னருக்கு எதிராக குற்றச்சாட்டை வைக்க ஆரம்பித்து விட்டார்கள். அம்மார் பின் யாஸிர் அவர்கள் தமது எளிமையினால் இந்தக் குற்றச்சாட்டுகளை சரி எனக் கருதினார்கள்.

ஸிஃப்பின் போரின் போது ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களுக்கு இந்தக் குழப்பவாதிகள் எவ்வாறு சாதுர்யமாக குழப்பத்தை ஏற்படுத்தி ஹஸ்ரத் உஸ்மான் அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள் என்ற உண்மை வெளிப்பட்டது. ஸிஃப்பின் போரில் மிகவும் வீரத்துடன் கலந்து கொண்டார்கள். மேலும், ஷஹாதத் அந்தஸ்தைப் பெற்றார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* வருத்தத்திற்குரிய விஷயமும் உள்ளது. புர்கினா ஃபாஸோவில் நேற்று முன்தினம் நமது ஒன்பது அஹ்மதிகள் மிகவும் கொடூரமான முறையில் ஷஹீதாக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அவர்களது ஈமானுக்கு சோதனையும் ஏற்பட்டது. அதில் அவர்கள் நிலைத்து நின்றார்கள். கண்மூடித்தனமாக சுட்டு வீழ்த்தவில்லை. மாறாக ஒவ்வொருவராக அழைத்து ஷஹீதாக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் விவரம் சில வந்து விட்டன. சில வந்து கொண்டிருக்கின்றன. இவர்களைப் பற்றிய குறிப்பை நான் அடுத்த குத்பாவில் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஷஹீதானவர்களின் உயர்ந்த அந்தஸ்திற்காக துஆ செய்தார்கள். மேலும், ஜமாஅத் மக்களை துஆ செய்ய வலியுறுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்:* ‘அங்குள்ள சூழ்நிலை தற்போது மோசமாக உள்ளது. வன்முறையாளர்கள் மிரட்டி விட்டு சென்றிருக்கிறார்கள். அவர்களுக்காக துஆ செய்து கொண்டிருங்கள். அல்லாஹுத்தஆலா அனைத்துத் தீமையில் இருந்தும் அவர்களைப் பாதுகாப்பானாக ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)